[5th February 1959

சட்டம் திருத்தப்பட்டு வருகிறது. அவ்விதம் திருத்தப்பட்ட மசோதாவை இந்த சட்ட மன்றத்தில் கூடிய சீக்கிரம் சமர்ப்பிக்கலாம் என்று நினைக்கிறேன்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஸார், திருப்பனந்தாள், பந்தநல்லூர் கிராமங்கள் தேவஸ்தான கிராமங்களாக இருப்பதினால், அந்த கிராமங்களில் தேவஸ்தான ரிஸர்வ் நிதியிலிருந்து ஹைஸ்கூல்கள் ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்திற்கும் தேவஸ்தானங்களுக்கும் பல விண்ணப்பங்கள் அனுப்பியும் அவை கவனிக்கப்படாமல் இருந்து வருகின்றன ஆகவே அந்த இடங்களில் உடனடியாக இந்த நிதியிலிருந்து ஹைஸ்கூல்கள் ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய வேண்டுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி அவர்களைக் கட்டாயப் படுத்த முடியாது.

Punka-pullers

* 39 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state the reason for keeping punka-pullers in Government service?

THE HON. SRI C. SUBRAMANIAM : Punka-pullers are employed for pulling punkas in a few Government offices which have not yet been electrified and housed in buildings which are not airy and well ventilated.

SRI N. K. PALANISAMI : ஸார், இன்னும் சில இடங்களில் அதாவது எலக்ரிஸிட்டி இல்லாத இடங்களில் பங்கா இழுப்பவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த இடங்களிலும் எலக்ரிஸிட்டி போடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : போட்டுக்கொண்டுதான் இருக்கிறோம்.

Retrenchment in the Commercial Taxes Department

* 40. *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Last Grade Servants of the Commercial Taxes Department who have been recently thrown out of employment on account of retrenchment measures in the departments?

THE HON. SRI R. VENKATARAMAN : 205 Last Grade servants were retrenched due to the re-organisation of the commercial Taxes Department with effect from 1st October 1958.

SRI M. S. SELVARAJAN : ஸார், இதுவரை மாற்றுவேலை எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டது. இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கும் ஆட்களுக்கு வேலை கொடுக்க இன்னும் எத்தனை காலம் ஆகும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : டிசம்பர் மாதம் 1-ம் தேதி வரை 104 பேர்களுக்கு பெர்மனண்டாகவும், 23 பேர்களுக்கு டெம்பரரியாகவும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ள 78 பேர்களுக்கும் சீக்கிரமாகவே வேலை கொடுக்கப்படும்.